
بسم الله الرحمان الرحيم

யார் அந்த தேவ்பந்த் உலமாகள்?





ummathemuhammedhiya

சரித்திரம் படைத்தவர்கள் மறைந்தாலும் படைப்புகள் மறைந்து விடாது. உண்மை உறங்கினாலும் முடங்கிவிடாது. உண்மையை ஊனமாக்காமல் காப்பவர்கள் உலமாக்கள். அதில் தேவ்பந்த் உலமாக்களின் பங்கு அலாதியானது. தாருல் உலூம் தேவ்பந்த், மார்க்க அறிவின் ஊற்றுக்கண். அது பொங்கி வழிந்து கொண்டே இருக்கும். இந்திய துணைக் கண்டத்தையும் தாண்டி உலகம் முழுவதும் பெருக்கெடுத்து ஓடுகிறது. இஸ்லாத்திற்கு உள்ளிருந்தும் வெளியிலிருந்தும் ஏற்பட்ட குழப்பங்களை களையெடுப்பதற்காக தேவ்பந்த் உலமாக்கள் தலையில் கஃபன் துணியை கட்டிக்கொண்டு களமிறங்கினார்கள். அவர்களுடிடய சரித்திரம் உண்மையான மார்க்க ரோஷத்தை படம் பிடித்துக் காட்டுகிறது.

அல்லாஹ் அவர்களை தக்க தருணத்தில் படைத்ததின் மூலம் இந்தியாவில் மட்டுமல்ல: முழு உலகிலும் ஏற்படவிருந்த வீழ்ச்சியை வீரியமிழக்கச் செய்தான். தேவ்பந்த் மூலம் ஏற்பட்ட மார்க்க மறுமலர்ச்சி உலகையே வியக்கச் செய்திருக்கிறது. ஆனால் இன்று தேவ்பந்த் என்று சொன்னால் சிலருக்கு மிளகாயை கடித்தது போல் இருக்கிறது. அசத்தியத்தின் பாரம்பரியத்தில் வந்தவர்களுக்கு சத்தியத்தை கேட்பதற்கு அப்படித் தான் இருக்கும். இந்தியாவில் குர்ஆன் ஹதீஸுடைய அறிவு மங்கிப் போயிருந்த காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட தாருல் உலூம் இன்று மார்க்க மேதைகள் ஆச்சரியப்படுமளவுக்கு மாபெரும் சேவையாற்றிக் கொண்டிருக்கிறது. 1912ஆம் ஆண்டு எகிப்தைச் சார்ந்த மார்க்க அறிஞர் ரஷீத் ரளா அவர்கள் தேவ்பந்த வந்த போது, பிரமிக்க வைக்கும் உங்களுடைய மார்க்கப் பணிக்கு உலக முஸ்லிம்கள் நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறார்கள். இந்த மத்ரஸாவை நான் பார்க்கவில்லையானால் இந்தியாவிலிருந்து பெரும் கவலையோடு திரும்பியிருப்பேன், என்று புகழாரம் சூட்டினார்.

இந்தியாவில் குர்ஆன்:

இந்திய முஸ்லிம்கள் மாற்று மதத்தினரோடு கலந்திருப்பதாலும் குர்ஆன், ஹதீணு பற்றிய முறையான போதனை இல்லாததாலும்

மாற்றுமத கலாச்சாரமும் சடங்குகளும் அவர்களிடம் புரையோடிக் கிடந்தன. கிரேக்க தத்துவத்தில் காட்டிய ஆர்வத்தை மக்கள் குர்ஆன், ஹதீஸில் காட்டவில்லை. ஷாஹ் வலியுல்லாஹ் (ரஹ்) அவர்கள் குர்ஆனுடைய போதனையை பரவலாக்குவது தான் இதற்கு ஒரே தீர்வு,என்பதை உணர்ந்தார்கள்.

அது வரை இந்தியாவில் குர்ஆன் பிராந்திய பாஷையில் மொழி பெயர்க்கப்படவில்லை. ஹிஜ்ரி 1150 ஆம் ஆண்டில் முதன் முதலாக ஃபார்சீ மொழியில் குர்ஆனை ஷாஹ் ஸாஹிப் (ரஹ்) அவர்கள் மொழிபெயர்த்தார்கள். பின்னர், அவர்களுடைய மகன் ஷாஹ் அப்துல் காதிர் தஹ்லவீ (ரஹ்) அவர்களும் மற்றொரு மகன் ஷாஹ் ரஃபீவுத்தீன் (ரஹ்) அவர்களும் உர்துவில் குர்ஆனில் மொழி பெயர்த்தார்கள். எந்த இஸ்லாமிய ஆட்சியும் நிகழ்த்த முடியாத மாபெரும் சீர்த்திருத்தப் புரட்சியை இந்த குர்ஆன் மொழிபெயர்ப்பு நிகழ்த்தியிருக்கிறது, என்று அபுல் ஹஸன் அலீ நத்வீ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்.

நமக்குக் கிடைத்த நபிமொழி:

ஹதீஸ் கலையிலும் மக்கள் பின்தங்கியிருந்தனர். மிஷ்காத் படித்துவிட்டால் அவரை பெரிய ஹதீஸ் கலை வல்லுணராக மக்கள் கருதினர். இந்த நிலையை மாற்றுவதற்காக ஷாஹ் வலியுல்லாஹ் (ரஹ்) அவர்கள் அரபு நாட்டுக்கு சென்று ஸிஹாஹுஸ்ஸித்தா எனும் ஆறு நபிமொழிக் கிரந்தங்களை நேரடியாக அதற்குரிய உஸ்தாதிடம் பயின்றுவிட்டு இந்தியாவுக்கு வந்து ஹதீஸ் பாடத்தை நடத்த ஆரம்பித்தார்கள். நம் தேசத்திற்கு ஷாஹ் (ரஹ்) அவர்கள் மட்டும் கிடைக்க வில்லையானால் நமக்கு ஹதீஸ் வந்து சேர்ந்திருக்குமா? என்பது கேள்விக்குறி தான்.

சர்வதேச களப்பணி:

முழு உலக முஸ்லிம்களும் இந்திய உலமாக்களுக்கு நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள். ஏனெனில்,இந்தியாவுக்கு ஹதீஸ் வந்த காலத்தில் ஏறத்தாழ உலகின் எந்தப் பகுதியிலும் நபிமொழிக்கு முழுமையாக சேவை செய்ய ஆளில்லை. அல்ஹதீஸ் வல் முஹத்திசூன் என்ற நூலின் ஆசிரியர் தம்முடைய நூலில் கூறுவதாவது:

தாத்தரியிரால் பக்தாதில் இஸ்லாமிய ஆட்சி வீழ்ந்த போது மார்க்க சேவை வலுவிழந்தது. அச்சமயம் எகிப்து உலமாக்கள் முன்வந்து நபிமொழிக்கு பணிவிடை செய்தார்கள். ஹிஜ்ரி பத்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எகிப்திலும் பின்னடைவு ஏற்பட்டது. இச்சமயத்தில் தான் இந்திய உலமாக்கள் முன்வந்து மாநபியின் வார்த்தைகளை வாழவைப்பதற்காக அரிய பணி செய்தார்கள். அந்த சேவை (நான்கு நூற்றாண்டுகளாக) இன்று வரை தொடர்கிறது. இஸ்லாமிய நாடுகளிலேயே இந்திய இன்று வரை ஹதீஸ் கலையால் நற்பாக்கியம் பெற்ற நாடாகத் திகழ்கிறது. (கிருத்தவக் கொள்கைகக்கு எதிராக) ஆங்கிலேயர்களிடம் (தேவ்பந்த் உலமாக்கள்) விவாதம் செய்து சத்தியத்திற்கு உதவியவர்கள் இந்திய உலமாக்கள். மேற்கத்திய நாகரிகம் அவர்களுடைய கொள்கைகளை தடம் புரளச் செய்வதற்குப் பதிலாக தடம் பதியச் செய்தது, ஆச்சரியத்திலும் ஆச்சரியம், என்று புருவத்தை உயர்த்துகிறார், நூலாசிரியர். (பக்: 438-441)

தேவ்பந்த மத்ரஸாவுக்கு வருகை புரிந்த ரஷீத் ரளா அவர்கள் தங்களுடைய மிஃப்தாஹு கூனூஸிஸ்சுன்னா என்ற நூலின் முன்னுரையில் இந்திய உலமாக்கள் மட்டும் நபிமொழிக்கு நற்சேவை புரிய களமிறங்கவில்லையானால் கிழக்கத்திய நாடுகளில் ஹதீஸ்கலையே காணாமல் போயிருக்கும், என்று கூறியுள்ளார்.

பெர்சனல்லா போர்ட் தந்த தேவ்பந்த்:

1972 ஆம் ஆண்டு பொது சிவில் சட்டம் பற்றிய சர்ச்சை விஸ்வரூபம் எடுத்தது. இதை முடிவுக்குக் கொண்டுவர தேவ்பந்த் உலமாக்கள் பெருமுயற்சி எடுத்தனர். தாருல் உலூம் தேவ்பந்துடைய அப்போதைய முதல்வர் மொலானா காரீ தைய்யிப் (ரஹ்) அவர்கள் தேசிய உலமாக்களை ஒன்றிணைத்து தேவ்பந்தில் பல கலந்தாய்வுக் கூட்டங்களை நடத்தினார்கள்.

இறுதியாக 1972 ஆம் ஆண்டு டிசம்பர் 27, 28 ஆகிய தேதிகளில் பொதுசிவில் சட்டத்தின் விளைவுகள் மற்றும் தனியார் சட்டத்தின் முக்கியத்துவம் பற்றி விளக்கி மாபெரும் மாநாடு நடைபெற்றது. ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் பங்கேற்றனர். இம்மாநாடு பிரசவித்ததது தான் காரி தைய்யிப் ஸாஹிப் (ரஹ்) அவர்களின் தலைமையில் உதயமான முஸ்லிம் தனியார் சட்ட வாரியம். தேவ்பந்த் தேடித்தந்த வாரியம் இன்று வரை இயங்கிக் கொண்டிருக்கிறது. தனியார் சட்டத்திற்கு ஆபத்து நேரும்போதெல்லாம். தேவ்பந்த் தன் பொறுப்பை மறக்கவில்லை.

ஷாஹ்பானு வழக்கில் நீதிமன்றமே குர்ஆனுக்கு தவறான விளக்கம் கொடுத்த போது வெகுண்டெழுந்து மறுப்பு கொடுத்தது. தாருல் உலூம் தேவ்பந்துடைய ஃபத்வாவுக்கு இந்திய அரசு தனி மரியாதை கொடுக்கிறது. தேவ்பந்த் முழூ இந்திய முஸ்லிம்களின் பிரதிநிதி என்று சொன்னாலும் மிகையாகாது.

ஃபத்வா எனும் மார்க்கத் தீர்ப்பு:

தேவ்பந்திலிருந்து லட்சோப லட்சம் ஃபத்வாக்கள் வெளியாகிவிட்டன. ஹிஜ்ரி 1329 முதல் 1419 ஆம் ஆண்டு வரை (பதிவு செய்யப்பட்ட ஃபத்வாக்கள் மட்டும்) ஏழு லட்சத்தை விட அதிகம். ஆங்கிலேய வரலாற்றாசிரியர் ஒருவர் தி முஸ்லிம்ஸ் ஆஃப் பிரிட்டிஷ் இந்டியா என்ற தம்முடைய நூலில், இந்திய முஸ்லிம்களை மூளைச்சலவை செய்வதற்கு தேவ்பந்த உலமாக்களுடைய ஃபத்வாக்கள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. (நூல்: முதாலஆ பரேலவிய்யத்)

எனவே தான் ஆங்கிலேயர்கள் ஷைகுல் ஹிந்த் (ரஹ்) அவர்களை மால்டா சிறையில் வைத்து ஆங்கிலேயனுக்கு ஆதரவாக ஃபத்வா கொடுக்கும்படி நிர்பந்தித்து இடுப்பில் இரும்பை பழுக்கக் காய்ச்சி சூடு போட்டனர். அவர்களுடைய ஜனாஸாவை குளிப்பாட்டும் போது இடுப்பில் எலும்பு தான் இருந்தது. சதை இருக்கவில்லை.

தேவ்பந்த் உலமாக்களில் முக்கியமானவர்களில் ஒருவரான முஃப்தி கிஃபாயதுல்லாஹ் (ரஹ்) அவர்களுடைய ஃபத்வாவைப் பார்த்துவிட்டு எகிப்திய உலமாக்கள்,நாங்கள் இப்படியொரு ஆலிமை உலகில் இதுவரை கண்டதில்லை, என்று கூறினர். இந்தியாவை ஆண்ட ஆங்கிலேயர் முஸ்லிம்களை கிருத்தவர்களாக்க திட்டம் தீட்டினர், ஆங்கிலேயர்கள். மேற்கத்திய சிந்தனையுடன் கூறடி கல்விக் கொள்கையை அமுல் படுத்தினர். காவல் துறை துணையுடன் இஸ்லாமிய கொள்கைகள் மீது பாதிரிமார்கள் சேற்றை வாரி வீசினர். 800 ஆண்டுகாலம் முஸ்லிம்கள் ஆட்சி செய்த ஸ்பெயினுடைய நிலை யாரும் அறியாததல்ல. சரித்திர ஆசிரியர்கள் இந்தியாவிலும் ஸ்பெயினுடைய வரலாற்றை எழுதுதவதற்காக பேனாவை எடுத்துக்கொண்டு தயாராக இருந்த சமயம் மார்க்க ரோஷமுள்ள இரண்டு தியாகிகள் தலையில் கஃபன் துணியை கட்டிக்கொண்டு களமிறங்கினர். 1. ரஹ்மதுல்லாஹ் கீரானவீ (ரஹ்) 2. காஸிம் நானூத்தவீ (ரஹ்) இவ்விருவரும் இஸ்லாத்திற்கு எதிரான கொள்கையுடையவர்களிடம் விவாதம் செய்து எதிரணியனரை தோல்வியுறச் செய்து ஓட ஓட விரட்டியடித்தனர்.

மௌலான காஸீம் நானூதவி (ரஹ்)

பெயர்:- முஹம்மத் பின் காஸிம் நானூதவீ.

பிறப்பு :- ஹிஜ்ரி 1248 ம் ஆண்டு ஷஃபான் மாதம்

{1833 -01}உத்ரப் பிரதேஷின் சஹாரன்பூர் பகுதியிலுள்ள நானூதா என்ற ஊரில் பிறந்தார்கள்.

இமாம் நானூதவீ அவர்கள் சிறு பிராயத்திலிருந்து மார்க்கப்பற்றுள்ளவராகவே

காணப்பட்டார்கள். தனது சிறு வயதிலே அல் குர்ஆனையும் கற்று முடித்தார்கள்.அதன் பின் பல்வேறு இமாம்களினது நூற்களையும்ஹதீஸ் ,தப்ஸீர் , பிக்ஹ் , போன்ற கலைகளை படிப்பதிலும் மனனமிடுவதிலும் தனது நேரத்தை செலவு செய்தார்கள்

சிறு வயதிலே அவர்களிடம் விவேகமும் , நல்ல மனன சக்தியும்

அறிவில் முதிர்ச்சியும் காணப்பட்டது.

ஆரம்பத்தில் தேவ்பந்தில் சிறிது காலம் படித்து விட்டு பின் சஹாரன்பூரிற்கு சென்று அங்கு கல்வி கற்றார்கள்.

ஹிஜ்ரி 1261 ம் ஆண்டு பேராசான் உஸ்தாத் மம்லூகுல் அலி அந்நானூதவீ அவர்களுடன் டில்லி நோக்கிப் பயணமாகி அங்கு அஷ்ஷெய்ஹ் ஷாஹ் அப்துல் கனி அல் முஜத்திதீ அவர்களிடம்
புஹாரி , முஸ்லிம் , திர்மிதீ ,முவத்தா , போன்ற ஹதீஸ் கிரந்தங்களை படித்தார்கள்.

டில்லியிலுள்ள மிக முக்கியமான அறிஞர்களிடம் கல்வி கற்ற இமாமவர்கள் அதன் பிறகு தனது ஆசானாகிய அஹ்மத் அலி ஸஹாரன்பூரீ ரஹ் அவர்களுடன் இணைந்து ஸஹீஹுல் புஹாரிக்கான தெளிவுரை எழுதுவதில் கவனம் செலுத்தினார்கள்.

இமாமவர்கள் சிறந்த ஆய்வாளராகவும் சிறந்த ஆசானாகவும் மக்கள் மத்தியில் இடம் பிடித்திருந்தார் பல் வேறு ஷரீஆ நூற்களையும் கற்பிப்பதில் சிறந்து விளங்கினார்கள் குறிப்பாக புஹாரி , முஸ்லிம் போன்ற கிரந்தங்களுக்கு அவர்கள் வழங்குகின்ற விரிவுரைகள் அனைத்து அறிஞர்களாலும் அக்காலத்திலே போற்றப்பட்டது

ஷைஹுல் ஹிந்த் மௌலானா மஹ்மூத் ஹஸன் தேவ்பந்தி , அல்லாமா பஹ்ருல் ஹஸன் கங்கோஹி , அல்லாமா அஹ்மத் ஹஸன் அம்ரோஹி ,அஷ்ஷைஹூத் தபீப் மன்ஸூர் அலி , அஷ்ஷைஹ் அப்துல் அலி மைரூதவீ போன்ற மாபெரும் ஹதீஸ் துறை மேதைகள் இமாம் நானூதவீ அவர்களின் ஹதீஸ் விளக்க வகுப்புக்களில் வந்து அமர்ந்து உச்சகட்ட பயனடைந்துகொண்டார்கள.

ஹதீஸ் வகுப்புக்கள் , விளக்கவுரைகள் , ஏனைய பாடங்கள் என்று இமாமவர்களின் காலம் அறிவைத் தேடுவதிலும் அதனை பிறருக்கு கற்றுக் கொடுப்பதிலுமே கழிந்தாலும் எழுத்துத் துறையிலும் அவரது பங்களிப்பு மிக விசாலமானதாகவே காணப்பட்டது இமாமவர்கள் கிட்டத்தட்ட நாற்பதுக்கும் மேல் நூற்களை எழுதியுள்ளார்கள்.

அல்லாமா முஹம்மத் யஃகூப் நானூதவீ அவர்கள் எழுதிய அல் இமாம் முஹம்மத் காஸிம் அந் நானூதவீ கமா ராஅய்துஹு

الإمام محمد قاسم النانوتوي كما رأيته

என்ற நூலின் 34 , 35 ம் பக்கங்களில் இமாம் காஸிம் நானூதவி அவர்கள் எழுதிய முப்பத்து நான்கு நூற்களின் பெயர்கள் அடங்கிய பட்டியலை அல்லாமா நூர் ஆலிம் ஹலீல் அல் அமீனீ அவர்கள் எழுதி வெளியிட்டுள்ளார்கள்.
ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவை மீட்டெடுப்பதற்காகவும் அவர்களது சிந்தனைகளை விட்டும் மக்களை பாதுகாப்பதற்காகவும் அதிகமாக உழைத்தவர்களில் இமாமவர்களும் ஒருவர்.
அதன் விளைவாக இமாமவர்கள் ஜாமிஆ அல் இஸ்லாமிய்யா தாருல் உலூம் தேவ்பந்தை ஸ்தாபிப்பதில் அதிகம் கவனம் செலுத்தினார்கள்
அதற்கமைய ஹிஜ்ரி 1283 முஹர்ரம் மாதம் பிறை பதினைந்து வியாழக்கிழமை{1866- 05- 30} தேவ்பந்த் கலாசாலையை தமது தோழர்கள் சஹாக்களின் துணையுடன் ஸ்தாபித்தார்கள்.
அதன் பின்பு முராத் ஆபாத் என்ற பகுதியில் மத்ரஸதுல் குரபா என்ற அரபுக் கலாசாலையையும் ஸ்தாபித்தார்கள்.

பிற்பட்ட காலங்களில் அது அல்ஜாமிஅதுல் காஸிமிய்யா என்ற பெயரில் அழைக்கப்பட்டது
அது போலவே கிலாஊடீ என்ற பகுதியில் மன்பஉல் உலூம் என்ற அரபுக் கலாசாலையையும் நிறுவினார்கள்.
இமாம் நானூதவி அவர்கள் கிறிஸ்தவர்கள் , இந்துக்கள் , ஷீயாக்கள் போன்றவர்களின் கொள்கைகளுக்கு எதிராக அதிகம் போராடியுள்ளார்கள்.

ஷீயாக்களின் வழிகெட்ட கொள்கைகளை விமர்சித்து ஹதிய்யுஷ் ஷீஆ هدية الشيعة எனும் நூலொன்றையும் இரண்டு பாகங்களில் எழுதியுள்ளார்கள்.
அத்தோடு சமூக சேவைகளிலும் முன்னின்று உழைத்துள்ளார்கள்.

இமாமவர்களின் வபாத் -

ஹிஜ்ரி ம் ஆண்டு ஜுமாதல் ஊலா மாதம் பிறை நான்கு வியாழக்கிழமை

- - ழுஹர் தொழுகைக்குப் பின் வபாத்தானார்கள்.

இமாமவர்கள் பற்றி எழுதப்பட்ட நூற்களில் சில:

«الإمام محمد قاسم النانوتوي كما رأيته» للشيخ يعقوب النانوتوي - تعريب فضيلة الأستاذ محمد عارفجميل القاسمي المباركفوري.

அல்லாமா

முஹம்மத் யஃகூப் நாநூதவீ அவர்கள் அல் இமாம் முஹம்மத் காஸிம் அந்நாநூதவீ கமா ராஅய்துஹு

என்று நூலொன்றை எழுதியுள்ளார்கள்

அதனை உஸ்தாத் முஹம்மத் ஆரிப் ஜமீல் அல் காஸிமீ அல் முபாரக்பூரீ அவரகள் அரபாக்கம் செய்துள்ளார்கள்.

«الإمام محمد قاسم النانوتوي» للشيخ خالد سيف الله الرحماني

அஷ்ஷைஹ் ஹாலித் ஸைபுல்லாஹ் ரஹ்மானீ அவர்கள் அல் இமாம் முஹம்மத் காஸிம் அந்நாநூதவீ என்று நூலொன்றையும் எழுதியுள்ளார்கள்.

سوانح قاسمي» للشيخ مناظر أحسن الغيلاني

அஷ்ஷைஹ் முனாழிர் அஹ்ஸன் அல்கைலானீ அவர்கள் ஸவானிஹ் காஸிமீ என்று நூலொன்றையும்.

مولانا قاسم نانوتوي، حيات وكارنامے» للشيخ أسير أدروي

அஷ்ஷைஹ் அஸீர் அத்ரவீ அவர்கள் மௌலானா காஸிம் நாநூதவீ ஹயாத் வகார்நாமே என்ற நூலொன்றையும் உருது மொழியில் எழுதியுள்ளார்கள்.

المراجع

«دارالعلوم ديوبند» للشيخ عبيد الله الأسعدي

الإمام محمد قاسم النانوتوي» للشيخ خالد سيف الله الرحماني،

مولانا قاسم نانوتوي، حيات وكارنامے» للشيخ أسير أدروي،

«سوانح قاسمي» للشيخ مناظر أحسن الغيلاني،

எங்களுடைய அன்புக்குரிய இமாமவர்களை அல்லாஹ் பொருந்திக்கொள்வானாக சுவனத்தின் உயர்ந்த பதவியையும் அன்னாருக்கு வழங்குவானாக!!!

மௌலான அஷ்ரப் அலி தானவி (ரஹ்)

அறிவு வானில் ஒரு நட்சத்திரமாக, உளப்பரிசுத்தப் பாதையின் ஒரு ஒளி விளக்காக வாழ்ந்து மறைந்த அறிவுக் கடல் மௌலானா அஷ்ரப் அலி தானவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பற்றி சிறிதளவாவது அறிந்திருப்பது மிகப் பொருத்தமாகும்.

☾ பெயர் : அஷ்ரப் அலி தானவி இப்னு அப்தில் ஹக் இப்னி அல்-ஹாபிழ் பைஜ் அலி

☾ பரம்பரை : உமர் ரழியல்லாஹு அன்ஹ் அவர்களுடன் சென்றடைகின்றது

☾ பிறப்பு : ஹி -1280/ றபீஉனில் ஆகிர்/ வியாழன் காலை ஆ- 1867/09/10

☾ பிறப்பிடம் : தானாபவன் என்ற கிராமம்

☾ வபாத் : ஹி- 1262/ 7/16 ஆ- 1943/7/20

☾ அடக்கம் : பொது அடக்கஸ்தலமாக அவர்கள் வக்பு செய்த இடத்திலேயே அடங்கப்பெற்றார்கள்

• சிறு வயது முதலே அனைவருடைய அன்பையும் சம்பாதித்திருந்தார்கள்.

• ஷைக் அப்துல் ஹக் திஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மௌலானா அவர்களுக்கு சிறு வயதிலே மார்க்க அறிவுகளை கற்றுக்கொடுத்தார்கள்.

5 வயதாகும் போது அன்புத் தாய் இறையடி சேர்ந்தார்கள். அத்துடன் தந்தையின் பராமரிப்பின் கீழ் வந்தார்கள்.

• வயது வெறும் 12ஆக இருக்கும் போதே இறவுத் தொழுகையில் அதீத ஆர்வம் செலுத்தினார்கள்.

• " ஆகூன் ஜீ " என்பவர்களிடம் குர்ஆன் மனனத்தை ஆரம்பித்து இறுதியில்

" ஹாபிழ் ஹுஸைன் அலி " என்பவர்களிடம் நிறைவு செய்தார்கள்.

• பார்சி மொழியையும் சில ஆரம்ப நிலை புத்தகங்களையும் சில மகான்களிடம் கற்றுத் தேர்ந்ததுடன்; மௌலானா பத்ஹ் முஹம்மத் தானவி என்பவர்களிடம் நடு நிலை புத்தகங்களை இனிதே கற்றார்கள்.

• வயது 15ஆக ஆகிய வேளை " தேவ்பந்த் " எனும் ஊருக்கு புறப்பட்டுச் சென்று அங்குள்ள " ஜாமிஆ தாருல் உலூம் தேவ்பந்த் " என்ற கலாசாலையில் ஹி- 1295ம் ஆண்டு சேர்ந்து பல கலைகளையும் கற்று பட்டம் பெற்றார்கள்.

• படிக்கும் காலத்திலேயே கிருஸ்தவர்களுடன் விவாதங்கள் செய்து வெற்றி பெற்றுள்ளார்கள்.

• நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் அழகிய வழிமுறைகளை அடி மனதால் நேசித்ததுடன் நூதன கொள்கைகளை அடியோடு வெறுத்தொதிக்கினார்கள். இவ்விடயத்தை அவர்களுடைய " இஸ்லாஹுர் ருஸூம் " மற்றும் " தஃலீமுத்தீன் " என்ற இரு நூல்களின் மூலம் தெளிவாகவே விளங்க முடியும்.

தஸவ்வுப் எனும் மெய்ஞானப் பாதையை நூதனக் கொள்கைகள், அடிப்படையற்ற கட்டுக்கதைகள் போன்றவற்றை விட்டும் பரிசுத்தப்படுத்தி புதிது படுத்தினார்கள்.

• அவர்கள் மொத்தமாக ஏறக்குறைய 800க்கும் அதிகமான நூல்களை தொகுத்தளித்துள்ளார்கள்.

• அவர்களுடைய முக்கியமான ஆசான்கள் சிலர்கள்:

1. முஹம்மத் யஃகூப் நானூத்தவி

2. ஷைகுல் ஹிந்த் மஹ்மூதுல் ஹஸன் தேவ்பந்தி

3. மன்பஅத் அலி தேவ்பந்தி

4. முல்லா மஹ்மூத்

5. ஸைய்யித் அஹ்மத்

6. முஹம்மத் அப்துல்லாஹ் முஹாஜிர் மக்கி

• மௌலானா அவர்களுடைய முக்கிய இரு உபதேசங்கள் :

1. நான் அனைவரையும் மன்னித்து விட்டேன் அனைவரும் என்னை மன்னித்து விடுங்கள்.

2. மார்க்க அறிவில் ஆர்வம் காட்டுங்கள்.

ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் (ரஹ்)

ஷஹீத் (ரஹ்) அவர்களின் சுருக்கமான வாழ்க்கை வரலாறு,அன்னாரின் நூலானதக்வியதுல் ஈமானிற்கு கிடைத்த அங்கீகாரம்,அன்னாரைப் பற்றிய நம் பெரியார்களின் நிலைப்பாடு என்ன? என்பதை பார்ப்போம்!

ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் ரஹ் அவர்கள் எட்டு வருடத்தில் குர்ஆன் மனனம் செய்தார்கள்.பிறகு 15,16 வருடங்கள் வரை ஹதீஸ், தப்ஸீர்,பிக்ஹ்,தர்க்கக்கலை தத்துவக்கலை,போன்ற கல்விகளை கற்றார்கள்.ஹதீஸ்களை ஷாஹ் அப்துல் அஜீஜ் அவர்களிடமிருந்து கற்றார்கள்.சில நூல்களை அப்துல் காதிர் (ரஹ்) அவர்களிடமிருந்து கற்றார்கள்.பிறகு ஆசிரியர்களின் அறிவுரையின் பேரில் கற்பித்தல்,போதனையில் ஈடுபடலானார்கள்.இதற்கு மத்தியில் போர்க்கலையின் பக்கம் கவனம் செலுத்தினார்கள்.மியா ரஹீம் பஹ்ஷ் என்பவரிடமிருந்து குதிரை சவாரியை கற்றுக்கொண்டார்கள். மிர்ஜா ரஹ்மத்துல்லாஹ்டமிருந்து போர்க்கலையில் ஒரு வகை மற்றும் வாள்பயிற்சியையும் கற்றுக் கொண்டார்கள்.பிறகு பாதச்சுவடுகளை வைத்து நபரை கண்டறியும் கலையின் பக்கம் கவனம் செலுத்தினார்கள்.பிறகு மூன்று வருடம் நீரில் நீச்சல் பயிற்சி மற்றும் சண்டையிடும் பயிற்சியையும் மேற்கொண்டார்கள்.அதில் பரிபூரணத்துவ தகுதி அடைந்தார்கள்.இதற்கு மத்தியில் மாணவர்களுக்கு பாடம் கற்பிக்க கடற்கரைக்கு அழைத்து வந்துவிடுவார்கள்.மேலும் தண்ணீரில் நின்று கொண்டு பாடம் நடத்துவார்.பிறகு ஓட்டப்பயிற்சி மேற்கொண்டார்.ஒரே மூச்சில் ஐந்து மைல்கள் ஓடும் அளவிற்கு தேர்ச்சி பெற்றார்.பிறகு மரத்தில் ஏறும் பயிற்சியை மேற்கொண்டார்.பிறகு ஜாமிஆ மஸ்ஜிது மற்றும் பத்ஹீபூரியின் கொதிக்கும் பளிங்கு தரையில் பாதணியின்றி நீண்ட நேரம் நின்று கொண்டு பயிற்சி செய்தார்.இரவில் விழித்திருப்பதை பழக்கமாக்கி கொண்டார்.எட்டு நாட்கள் தொடர்படியாக விழித்திருந்தார்.பிறகு விரும்புகிற நேரத்தில் தூங்கும் அளவிற்கு ஆற்றல் பெற்றார்.

விரும்புகிற நேரத்தில் விழித்துக் கொள்வார்.பிறகு வாழ்கையெனும் களத்திலே பல தரப்பட்ட கல்விகளைப் பற்றி முக்கியமான நூல்களை எழுதினார்கள்.ஷாஹ் இஸ்மாயில் அவர்களுடன் இரு பெரியார்களும் மிகவும் பிரியம் வைத்திருந்தனர்.

ஷாஹ் அப்துல் அஜீஜ் (ரஹ்) அவர்கள் தனது சகோதரனின் மகனான ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் அவர்கள் மற்றும் அவரின் பேரனான ஷாஹ் இஸ்ஹாக் ஸாஹிப் இருவரின் தலையில் கைவைத்து இந்த துஆவை ஓதுவார்கள்.

الحمد لله الذي وهب لی علی الکبر اسماعیل و اسحاق

இஸ்மாயில் மற்றும் இஸ்ஹாக்கை எனக்கு அளித்த அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும் ஷாஹ் அப்துல் காதிர் அவர்கள் மிகப்பெரிய ஞானவான பெரியோராக திகழ்ந்தார்கள்.

அன்னாரின் ஈமானிய நுண்ணறிவு பிரபல்யமானது.அவர்கள் ஷாஹ் இஸ்மாயில் ஷஹீதை மிகவும் நேசித்தார்கள்.இதனால் அவருடைய பேத்தியை இஸ்மாயில் ஷஹீத் அவர்களுக்கு திருமணம் செய்துவைத்தார்கள். இஸ்மாயில் ஷஹீதின் எதிர்காலம் எதிரிகள் கூறுவதைப் போல இருளாக இருந்திருந்தால் ஈமானிய நுண்ணறிவு கொண்ட ஷாஹ் அப்துல் காதர் அவர்கள் பிறகு எப்படி இஸ்மாயில் ஷஹீதை நேசித்திருப்பார்? அவரின் பேத்தியை எப்படி திருமணம் செய்து வைத்திருப்பார்?

ஷாஹ் அப்துல் காதிரின் ஈமானிய நுண்ணறிவுக்கு உதாரணம் ரமளான் மாதம் முப்பதாக இருந்தால் முதல் தராவீஹிலே ஒரு ஜீஸ்உ ஓதுவார்கள்.29 இருந்தால் அதற்கு ஏற்ப ஓதுவார்கள்.அவரின் பெரிய சகோதரர் ஷாஹ் அப்துல் அஜீஜ் தன்னுடைய சகோதரரின் இந்த செயலின் மூலம் இந்த வருடம் ரமளான் முப்பதா? அல்லது இருபத்தொன்பதா? என அறிந்து கொள்வார்கள்.அவரிடத்தில் ஏதேனும்ஷீஆ ஸலாம் கூறினால் வ அலைகும் என்று மட்டும் பதில் கூறுவார்.அஹ்லே சுன்னா ஸலாம் கூறினால் முழுமையாக பதில் அளிப்பார். ஷீஆக்கள் அன்னாரின் நுண்ணறிவை மற்றும் கஷ்ஃபை சோதிப்பதற்கு வந்து ஸலாம் சொல்வார்கள்.ஆக. ஷாஹ் அப்துல் காதிர் அவர்கள், ஷாஹ் இஸ்மாயிலை நேசித்தது மற்றும் உளப்பூர்வமாக பிரியம் கொண்டதன் மூலம் இந்த வாலிபர் நற்பாக்கியம் பெற்றவர் என்பதை அறியமுடிகிறது.

சீர்திருத்தும் மற்றும் ஜிஹாதின் ஆரம்பம்:

ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் (ரஹ்) அவர்கள் பித்அத் மற்றும் மார்க்கம் தடுத்த காரியங்களுக்கு எதிராக சீர்திருத்த பிரசகங்களை ஜாமிஆ மஸ்ஜிதில் ஆரம்பித்தார்கள்.முதல் தடவை பிரசங்கத்தின் போது இந்த ஆயத்தை ஓதினார்கள்

فلا و ربك لا يؤمنون حتى يحكموك فيما شجر بينهم ثم لا يجدوا فى انفسهم
حرجا مما قضيت و يسلموا تسليما

கருத்து: (முஹம்மதே!) உம் இறைவன் மேல் ஆணையாக! அவர்கள் தமக்கிடையில் ஏற்பட்ட சண்டையில் உம்மை நீதிபதியாக ஏற்று, பின்னர் நீர் வழங்கிய தீர்ப்பில் தமக்குள் அதிருப்தி கொள்ளாமல் முழுமையாக கட்டுப்படும் வரை அவர்கள் நம்பிக்கை கொள்ளமாட்டார்கள்.

ஒரு தடவை ஜாமிஆவில் குர்ஆன் வசனத்துடன் மாற்றுமத சடங்கு சம்பிரதாயங்களுக்கு எதிராக தீப்பொறி பறக்கும் பிரசங்கத்தை நிகழ்த்தினார்கள்.ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் அவர்களின் உபதேசத்தால் மற்றும் சீர்திருத்த பேச்சால் கேட்பவர்கள் அழும் அளவிற்கு உள்ளத்தில் தாக்கத்தை ஏற்படுத்தியது.அதே மஜ்லிஸில் அல்லாஹ்விடம் தவ்பா செய்து மௌலானாவின் ஜிஹாத் அணியில் இணைந்தனர்.ஒரு தடவை ஜாமிஆ மஸ்ஜிதில் திருநங்கைகளுக்கு பயான் செய்தார்.அந்த உபதேசத்தின் மூலம் உணர்வு பிறந்தது.அவர்கள் அணிந்திருந்த அக்கால ஆடைகளை கிழித்தெறிந்தனர்.கைகளில் இருந்த மருதாணி நிறத்தை போக்க கல்லில் தேய்த்தனர்.பிறகு அன்னாரிடத்தில் வந்து தவ்பா செய்து தோழமையில் இணைந்து ஜிஹாதில் கலந்து ஷஹாதத்தெனும் வீரமரணம் அடைந்தனர்.

ஒரு தடவை ஷாஹ் அப்துல் அஜீஜ் அவர்களின் மதரஸாவிற்கு வெளியே ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் அவர்கள் நின்று கொண்டிருந்தார்கள். அவர்களை இஸ்லாமிய பெண்கள் தங்களின் அலங்காரத்தை வெளிப்படும் வகையில் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். அவர்களின் நாணமின்மையால் கோபம் கொண்டார்கள். இவர்களெல்லாம் யார்? என கேட்டார்கள்? இவர்கள் தில்லியின் பாரம்பரியமான கோத்திரத்தை சேர்ந்தவர்கள்.அக்கம் பக்கத்தில் ஏதேனும் விஷேசம் நடைபெறலாம் அதில் கலந்து கொள்ள செல்கிறார்கள் என மக்களில் சிலர் பதிலளித்தனர்.
அன்னார் கேட்டார்கள் இவர்கள் முஸ்லிம்களில்லையா? நான் அவர்களுக்கு மார்க்கத்தை எத்திவைப்பதானது அவசியமாக உள்ளது.நாளை மறுமையில் இது சம்பந்தமாக நம்மிடத்தில் விசாரிக்கப்படும். அவர்களுக்கு ஏன் புரியவைப்பதில்லை? அதற்கு மக்கள் கூறினார்கள் அவர்களுக்கு பின்னால் செல்லாதீர்கள்! அவர்களின் சமூகத்தில் மதிப்பும் மரியாதை உள்ள பெண்கள் தங்களின் மீது பழிசுமத்திவிடலாம் அதற்கு அன்னார் கூறினார்கள் அல்லாஹ்வின் பாதையில் ஏற்படும் சிரமங்களை சகித்துக் கொள்வதால் பாக்கியம் பெறலாம்.பிறகு மஃரிபிற்கு எளிமையான ஆடை அணிந்து அவர்களின் இடத்திற்கு சென்றார்கள்.அன்னாரை ஏழை என்பதாக எண்ணி அனுமதி அளித்தனர்.அன்னார் நின்றவாறு உள்ளத்திற்கு உணர்வூட்டும் தட்டியெழுப்பும் உபதேசம் செய்தார்.அதனால் அனைத்து பெண்களும் அழஆரம்பித்தனர். அவர்களில் موٹی என்ற கோத்திரத்தினர் அந்த நேரத்திலேயே தவ்பா செய்தனர்.அவர்களின் அணியில் இணைந்து அந்தப் பெண்கள் முஜாஹிதின்களின் குதிரைகளுக்கு தீவினம் கொடுக்கும் பணி செய்தனர்.
அன்னாரின் உள்ளத்தை தட்டியெழுப்பும் உரைகளுக்கு காரணம் உம்மத்தின் மீதுள்ள கவலையும் நபியவர்களின் மீதுள்ள கலப்பிற்ற அன்பினால்தான்.

இந்த செய்தியை அவர்கள் நம்பிக்கை கொள்ளாவிட்டால், துக்கத்தால் அவர்களுக்குப் பின்னால் உம்மையே நீர் அழித்துக் கொள்வீர் போலும்!(சூரா அல்கஹ்ஃப்)

இறைமறையின் திருவசனத்திற்கு ஏற்ப அன்னார் இருந்தார்கள். அல்லாஹ்வின் மீது பேரின்ப காதல் உள்ளத்தில் நிரம்பியிருந்தது.குர்ஆன் பொதுவாக அழைப்பு பணியில் மென்மையை நளினத்தை கடைப்பிடிக்க சொல்கிறது.

فقولا له قولا لينا

கருத்து: அவனுக்குக் கனிவான சொல்லை நீங்கள் இருவரும் சொல்லுங்கள்(தாஹா)

ஆனால் அதே சமயத்தில் இஸ்லாமிய அழைப்பாளர் குழப்பத்தை விரும்பும் நயவஞ்சகர்களுடன் கடுமையை கடைப்பிடிக்க சொல்லி வலியுறுத்துகிறது.

يايها النبي جاهد الكفار و المنفقين و اغلظ عليهم و مأوهم جهنم و بئس المصير

நபியே ஏக இறைவனை மறுப்போருடனும், நயவஞ்சகர்களுடனும் போரிடுவீராக அவர்களிடம் கடினமாக நடப்பீராக அவர்களின் புகலிடம் நரகம் அது மிகக் கெட்ட தங்குமிடம்.இந்த வசனத்தின் விரிவுரையில் முபஸ்ஸிர்கள் கூறுகிறார்கள் காபிர்களுடன் வாளேந்தி போராடுங்கள். நயவஞ்சகர்களுடன் கோபத்துடன் கடுகடுப்புடன் நடந்து கொள்ளும்படி குர்ஆன் கட்டளையிடுகிறது.(تفسير مدارک)

எந்த நபர் தவறான கொள்கையில் நிலைத்திருப்பாரோ அவருடன் கடுமையாக போராடவேண்டும் என்பதும் இதிலிருந்து பெறப்படுகிறது என்பதாக தப்ஸீர் ஜலாலைனில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹள்ரத் ஷாஹ் இஸ்மாயில் அவர்கள் பித்அத்வாதிகள் இணைவைப்பாளர்களுடன் கடுமையாக நடந்த கொண்டதன் காரணமும் இந்த ஆயத்தின் அடிப்படையிலாகும்.

தக்வியதுல் ஈமான் என்ற நூலின் மீது குர்ஆன்,ஹதீஸ்,தப்ஸீரில் சுய விளக்கத்தை புகுத்தி விமர்சனம் செய்பவர்கள் ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் அவர்கள் வாழ்ந்த காலத்தில் பெரும்பான்மையான முஸ்லிம்கள் பெயரளவில் முஸ்லிம்களாக வாழ்ந்தார்கள். இஸ்லாத்திற்கும் அக்கால முஸ்லிம்களுக்கு மத்தியில் வானம்,பூமிக்கு மத்தியில் உள்ள வித்தியாசத்தைப் போல இஸ்லாம் இருந்தது.மாற்று மதத்தவர்ளுக்கும் இஸ்லாமியர்களுக்கும் மத்தியில் எந்த வித்தியாசமும் இல்லாத அளவிற்கு ஒன்றிப்போயிருந்தனர். இதனை அறிந்து கொண்டால் அன்னாரின் அந்தஸ்தையும்,அவரின் நூலின் பெருமதியை விளங்கு முடியும்.முஜத்தித் அல்பஸானி அவர்கள் அவரின் மக்தூபாதில் எழுதியுள்ளார்கள்.

ஹோலி பண்டிகை:

முஸ்லிம் பெண்கள் ஹோலி பண்டிகையின் போது அவர்களின் மகள்கள் மற்றும் சகோதரிகளின் வீடுகளுக்கு நிறம்பூசப்பட்ட பானையில் சிவப்பு வர்ணம் பூசப்பட்ட அரிசியை அனுப்பி கொண்டிருந்தார்கள். இஸ்லாமியர்களில் இறையச்சமுள்ள சிலரை தவிர பெரும்பாலனவர்கள் ஹோலி பண்டிகையை கொண்டாடினார்கள். இரண்டாவது ஷாஹ் ஆலம் அவர்களின் காலத்திலே அரண்மையில் ஹோலிக்காக விளக்களை அலங்கரித்தனர்.மேலும் சரஸ்வதி தேவியை வணங்கினர்.

தீபாவளி:

தீபாவளிக்கு அடுத்த நாள் பூஜை செய்தனர்.ஷாஹ் ஆலம் இதற்காக கவிதைகள் பாடுவார். தசரா: தசராவின் போது அரண்மையில் கோலாகலமாக
கொண்டாடினார்கள்.மேலும் அக்பர் ஷாஹ்
ஸானி மற்றும் பகதூர்ஷாஹ் ஜஃபர் இருவருக்கு முன்பாக கழுத்து மற்றும் இறக்கை நீலநிறமாக உள்ள பறவையானது விடப்படும்.தலைவர்கள், பொதுமக்கள் இந்த சடங்கை பார்ப்பதற்கு செல்வார்கள்.

பூக்கள் மலரும் மாதம்:

இந்த மாதத்தில் பண்டிகையை விமரிசையாக கொண்டாடுவார்கள். பதினைந்து நாள் வரை தில்லியில் பலதரப்பட்ட கப்ருகளில் விழா எடுப்பார்கள்.ஹயாத் ஜாவீதிலே மௌலானா ஹாலி குறிப்பிட்டுள்ளார்கள் ஸர்ஸய்யிதின் நானா மற்றும் கவாஜா ஃபரீத் இருவரும் இந்த விழாவிற்கு வழங்கினார்கள்.

கலிகான் குறிப்பிட்டுள்ளார் இந்த மாதத்தின் முதல்நாள் தில்லி முஸ்லிம்கள் தர்ஹாவிற்கு வந்து வழிபடுவார்கள்.ஹள்ரத் چراغ دلوی ன்கப்ரில் விளக்கு எரிப்பார்கள். இரண்டாம் நாளில் குதுப் ஸாஹிபின் கப்ருக்கு செல்வார்கள்.மூன்றாம் நாளில் ஹள்ரத் நிளாமுத்தீன் ரஹ் அவர்களின் கப்ரில் ஒன்றுகூடி கவ்வாலி என்ற பெயரில் இன்னிசை இசைக்கப்படும்.நான்காம் நாளில் ஸய்யத் ஹஸன் ரஸூல் ரஹ் கப்ரிலும் ஐந்தாம் நாளில் ஷாஹ் ترکمانகப்ரின் மீது ஆறாம் நாள் அரண்மையில் அந்த பண்டிகையை கொண்டாடுவார்கள்.

ரக்ஷபந்தி:

ரக்ஷபந்த் நாளில் அரண்மனையிலும் முஸ்லிம் தெருக்களிலும் இந்தப் பண்டிகை கோலாகலாமாக கொண்டாடப்படும்.அக்பர் ஷாஹ் ஷானி மற்றும் பகதூர்ஷாஹ் இருவரின் தலைமையில் பண்டிகை கொண்டாடப்படும்.இந்த விழாவானது அரண்மையிலிருந்து குதுப் ஸாஹிப் தர்ஹா வரை செல்லும்.

கிருஷ்ணன் ஜெயந்தி :

கிருஷ்ணன் ஜெயந்தி முஸ்லிம்கள் கொண்டாடினார்கள்.சில முஸ்லிம்கள் கம்சன் (அநியாயம் செய்து கொண்டிருந்த மன்னனை கிருஷ்ணண் கொன்றான் என்ற நம்பிக்கை இந்துக்களிடம் உள்ளது) என்ற உருவத்தை செய்து அதனின் நெஞ்சை கிழிப்பார்கள்.அதற்கு முன்பாக நெஞ்சில் தேனை நிரப்பிவிடுவார்கள்.அதனை இரத்தமாக எண்ணி கொள்வார்கள்.

சீதலாதேவி வணங்குதல்:

மிர்ஜா மள்ஹர் ஜான் குறிப்பிட்டுள்ளார் :

அம்மை நோய் வெளிப்படும் நேரத்தில் முஸ்லிம் பெண்கள் பெரும்பாலும் இணைவைப்பில் சிக்கியிருந்தார்கள்.சீதா கதை:இந்துக்கள் பண்டிகை காலத்தில் நாராயணின் வணக்கத்தைப் பற்றி கதை சொல்வார்கள்.அதை போன்று முஸ்லிம்களும் நன்றிசெலுத்தும் பெயரில் சீதா கதை சொல்வார்கள்.இந்த இருகதைகளும் ஒன்றுடன் ஒன்று ஒப்புமையாக இருக்கும்.தர்ஹாவில் இணைவைப்பான காரியங்கள் அரங்கேற்றப்பட்டது.ஷாஹ் வலியுல்லாஹ் வஸிய்யத்தின் மூலம் முஸ்லிம்கள் மார்க்கத்தை விட்டு எவ்வளவு தூரம் விலகியிருந்தார்கள் என்பதை அறியலாம். நீங்கள் மதார் ஸாஹிப்,ஸாலார் ஸாஹிப் கப்ருகளை ஹஜ் செய்கிறீர்கள்.மேலும் இது உங்களின் கேடுகெட்ட செயலாகும். (وصیت نامہ)

மஸ்ஜிதுகள் பாழடைந்தும்,கப்ருகள் அலங்கரிக்கப்படுதலும்:

வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளார்கள் இந்த காலத்திலே மஸ்ஜிதுகள் பாழடைந்தும்,கப்ருகள் அலங்கரிக்கப்பட்டு இருந்தன.தில்லி ஜாமிஆ மஸ்ஜிதில் பெரியார்களின் உருவப் படங்கள் இருந்தன.மிர்ஜா மள்ஹர் ஷானியின் உறவினர் ஸய்யித் இஸ்மாயில் மதனி மதீனாவிலிருந்து இந்தியாவிற்கு வருகை தந்தார்.ஜாமிஆ மஸ்ஜிதின் நினைவுச் சின்னங்களை பார்வையிட சென்றார்.திரும்பி செல்லும் போது பெரியார்களின் உருவப்படங்கள் பள்ளியில் இருப்பதை மிர்ஜா ஸாஹிபிற்கு சுட்டிகாட்டினார்.மிர்ஜா ஸாஹிப் அதனைப் பற்றி ஷாஹ் ஆலம் ஸானிக்கு கடிதம் அனுப்பினார்.பிறகு உருவப் படங்கள் அங்கிருந்து அகற்றப்பட்டது.

இந்தியா சுவனத்தின் அடையாளம்:

ஜைத் ஸாஹிப் அவர்கள், ஷிர்க்,குஃப்ரு,சடங்கு, சம்பிராதயம் அரங்கேறிய வேளையில் இந்தியாவை அந்நேரத்தில் சுவனத்தின் அடையாளம் என்பதாக வர்ணித்தார். (இது அறியாமையாகும்) பதினொன்றம் நூற்றாண்டில் மறுமலர்ச்சியாளர்: இந்தியாவிலே முஸ்லிம்கள் மார்க்க ரீதியாக மிகப்பெரிய அறியாமையில் இருந்தனர்.ஆனால் அதே சமயத்தில் அரசியல் ரீதியாக வலிமையாக இருந்தனர்.இந்த நூற்றாண்டில் முஜத்தித் அல்ஃபஸானி ரஹ் ஷாஹ் அப்துல்ஹக் திஹ்லவி இருவரின் சீர்திருத்தம் முயற்சி வெற்றி பெற்றது.அக்பர் ஜஹாங்கீருக்குப் பிறகு ஷாஹ்ஜஹான் மற்றும் ஆலம்கீர் போன்ற மார்க்கப் பற்றுள்ளவர் அரியணையில் ஏறினார்.ஆலம்கீர் ரஹ் அவர்கள் அனைத்து ஷிர்க்,சம்பிரதாயம், சடங்குகள் ஆடம்பர பழக்கங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்தனர். பன்னிரெண்டாம் நூற்றாண்டில் அரசியல் ரீதியாகவும் இஸ்லாமியர்களின் ஆதிக்கம் நீங்கியது.இஸ்லாமிய கலாச்சாரங்கள், பண்பாடுகள் விடைபெற்றன. இஸ்லாத்தை காப்பதற்கு ஷாஹ்வலியுல்லாஹ் திஹ்லவி உருவெடுத்தார்.அந்த காலத்திலே மிர்ஜா மள்ஹர் ஜான்,ஜான் பஹ்ருத்தீன் ஷிஷ்தி போன்ற உண்மையான ஞானிகளும் இருந்தனர்.ஆனால் மறுமலர்ச்சி ஏற்படுத்தும் வகையில் இருந்தவர் ஷாஹ் வலியுல்லாஹ் தெஹ்லவி இந்த முயற்சியானது எழுதுதல்,கற்பித்தல், போதித்தல் என்ற வட்டத்துடன் சுருங்கியது.இதனை செயல் ரீதியான ஜிஹாதின் மூலம் முஸ்லிம்களின் வாழ்க்கையில் உருவாக்கியவர்கள் ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் மற்றும் ஸய்யித் அஹ்மத் என்ற இரு பெரியோர்களின் மூலம் பூர்த்தியானது.பிறகு சில நாட்களிலே இந்த முயற்சி தோல்வியை தழுவியது.

இந்த ஜஹாதானது பாலாகோட் மைதானத்தின் முடிவுக்கு வந்துவிட்டது.இதற்குப் பிறகு மீண்டும் இயக்கம் உருவானது.அதுவும் தோல்வியை தழுவியது.பிறகு ஷாமிலி மைதானத்தில் சத்தியத்திற்கும், அசத்தியத்திற்கும் மத்தியில் இறுதியாக மோதல் உண்டானது.அதில் ஆர்வமும் துணிவுமிக்க சிலர் இணைந்து ஜிஹாதிற்கு உயிரூட்டினர்.ஆனால் இந்த முயற்சியும் பலனளிக்கவில்லை.நாடு முழுவதும் ஆங்கிலேயர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருந்தது.இதற்குப் பிறகு இஸ்லாமிய கலாச்சாரம்,பண்பாட்டை பாதுகாக்கதாருல் உலூம் தேவ்பந்த்நிறுவப்பட்டது. அல்ஹம்துலில்லாஹ் இது வெற்றிவாகை சூடியது.

இன்று முஸ்லிம்களிடம் ஷிர்க்,பித்அத்,சடங்கு, சம்பிரதாயம் போன்றவைகளின் மீது வெறுப்பு இருப்பதன் காரணம் பித்அத்,ஷிர்கிற்கு எதிராக திரண்ட ஒட்டுமொத்த முயற்சிதான் காரணமாகும்.உலமாயே தேவ்பந்த்,ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் இவர்களின் வழியில் நடப்பவர்களுக்கு கிடைத்த பலனாகும்.

ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் ரஹ் அவர்களைப் பற்றி ரஷீத் அஹ்மது ரஹ் அவர்களின் நிலைப்பாடு: மௌலவி முஹம்மது இஸ்மாயில் ஷஹீத் (ரஹ்) அவர்கள் இறையச்சமிக்கவராக, பித்அத்தை களைந்தெடுப்பவராக, சுன்னத்தை செயல்படுத்துபவராக, குர்ஆன் ஹதீஸின் படி செயல்படுபவராக, படைப்புகளை நேர்வழியின் பால் அழைப்பவராக வாழ்வு முழுவதும் இதே நிலையில் இருந்து, இறுதியாக அல்லாஹ்வுடைய பாதையில் போர் செய்து ஷஹீதானார்கள்.இவரின் இறுதிநிலை இறைநேசராகவும், ஷஹீதாகவும் இருந்துள்ளார்.

அல்லாஹ் குர்ஆனில் கூறுகிறான்:

ان اولياء الله الا المتقون

இறைநேசர்கள் பயபக்தியாளர்களாக தவிர வேறில்லை.இந்த ஆயத்தின் படி இஸ்மாயில் ஷஹீத் ரஹ் அவர்கள் இறைநேசர் என்பதை விளங்க முடிகிறது.

من قاتل فى سبيل الله فواق ناقة فقد وجبت له الجنة

கருத்து: அல்லாஹ்வின் பாதையில்,ஒட்டகையில் ஒருமுறை பால் கறந்து மறுமுறை பால் கறக்கும் நேர அளவுக்கு ஒருவர் போரிட்டால்,அவருக்கு சொர்க்கம் கிடைக்கும் என்று நபி ஸல் அவர்கள் கூறினார்கள்.

இந்த ஹதீஸின் படி அவர்கள் சுவனவாசியாக உள்ளார்கள்.எந்த நபர் வெளிரங்கத்தில் தக்வாவுடன் இருந்தார்.பிறகு அல்லாஹ்வின் பாதையில் உயிர்நீத்தார் அவர் சுவனவாசியாவார்.மேலும் மனத்தூய்மையுள்ள இறைநேசராகவும் உள்ளார்.இப்படிப்பட்ட நபரை நிராகரிக்கப்பட்டவர் என்பவர்தான் நிராகரிக்கப்பட்டவர் இந்தளவிற்கு அங்கீகாரம் பெற்றவரை காபிர் என்பவர்தான் காபிராகுவார்

من عادي لى وليا فقد آذنته بالحر

எவர் என்னுடைய இறைநேசரை பகைத்துக் கொள்வாரோ அவரிடத்தில் நான் போர்பிரகடனம் அறிவிக்கிறேன் என ஹதீஸே குத்ஸியில் உள்ளது.

பாருங்கள்! அல்லாஹ்வே! தன்னுடன் போர்செய்பவர் என்று யாரை சொன்னான்? இறைநேசரை பகைத்துக் கொள்பவரைதான் உண்மையில் அங்கீகரிக்கப்பட்ட ஆலிமை நிராகரிக்கப்பட்டவர் என்று சொல்பவர் கட்டாயம் மிகப்பெரிய பாவியாவார்.இதுதான் அனைத்து இமாம்கள் மற்றும் இமாம் அபூஹனீபா ரஹ் அவர்களின் நிலைப்பாடாகும்.மேலும் இறைநேசரை பகைப்பது இறைநிராகரிப்பிற்கு நெருக்கமாகும். கீழ்த்தரமாக விமர்சனம் செய்யும் பாவியான பித்அத்திகளுக்கு அல்லாஹ் நேர்வழிகாட்டுவானாக! இஸ்மாயில் ஷஹீத் ரஹ் அவர்கள் பித்அத்தை எதிர்த்ததாலும்,அதனை அடியோடு களைந்தெறிந்ததின் காரணமாகவும், மார்க்கத்தின் பெயரால் வயிறு வளர்த்துக் கொண்டிருந்ததிற்கு முற்றுப்புள்ளி வைத்ததின் காரணமாகவும் விரோதமும் கோபமும் கொண்டு அன்னாரை தரக்குறைவாக விமர்சிக்க ஆரம்பித்தனர்.எவ்வாறு ரவாபிள்கள்,சுன்னத்தை பேணுபவர் மற்றும் ஷைகைன் ரளி அவர்களை விரோதம் கொண்டு விமர்சிப்பதைப் போன்று மௌலவி இஸ்மாயில் ரஹ் அவர்களை விமர்சிப்பவர்களும் சபிக்கப்பட்டவர்களாக உள்ளார்கள். ஹதீஸின் கருத்தானது எவர் ஒருவரை சபிப்பாரானால் சபிக்கப்பட்டவர் சாபத்திற்குரியவராக இல்லையெனில் அந்த சாபமானது சபித்தவரின் பக்கமே திரும்புகிறது.ஷாஹ் இஸ்மாயில் ஷஹீத் ரஹ் அவர்களை சபித்தவரின் மீது சாபமானது நிச்சயமாக திரும்பும்.சபித்தவர்தான் அல்லாஹ்வின் ரஹ்மத்தை விட்டு விரட்டப்பட்டவர்.

மௌலானா கங்கோஹி ரஹ்அவர்கள் கூறினார்கள் தக்வியதுல் ஈமான் என்ற நூலின் மூலம் மிகப்பெரும் பலன்கள் ஏற்பட்டன.அவரின் காலத்திலே இரண்டறை லட்சம் மக்கள் சீர்திருத்தம் பெற்றனர்.அதன் பிறகு எண்ணிடமுடியாத அளவு பலன்கள் ஏற்பட்டன.(ارواح ثلاث)

தக்வியதுல் ஈமான் என்ற நூலில் தெளிவான ஆதாரங்களுடன் மிக எளிமையான முறையில் ஏகத்துவ
கொள்கை விளக்கப்பட்டுள்ளது. அல்லாஹ்வின் ஆற்றலின் மூலம்தான் ஆதம் அலை முதற்கொண்டு அனைத்து படைப்புகளும் படைக்கப்பட்டுள்ளன என்பதை நிரூபித்துள்ளார்கள். அஹ்லுல் பித்அத்,ஷிர்க் செய்பவர்களின் தவறான சிந்தனைகளை தெளிவுப்படுத்தியுள்ளார். இதனால் அதிகமான மக்கள் நேர்வ ழியின் பாலும்,சரியான கொள்கையின் பால் செல்லும் பாக்கியம் கிடைத்தது.(جهد المقال)

தக்வியதுல் ஈமான் நூலானது ஒவ்வொரு முஃமினின் ஈமானிற்கும் வலிமை ஊட்டகூடியதாகும். உயிருக்கு உணவாக உள்ளது.சந்தேகமின்றி அந்த நூலில் உள்ளதின்படி அமல் செய்வது அவசியமாகும்.அதில் ஆரம்பம் முதல் இறுதி வரை கொள்கைகளும், அமல்களும் உள்ளன.அவைகள் அனைத்தும் அஹ்லே சுன்னாவிற்கு உட்பட்டவைகள்தான். அதிலே இணைவைப்பு கொள்கைக்கு ஷிர்கின் தலையின் மீது தவ்ஹீதின் ரம்பமாக அந்த நூல் திகழுகிறது. அறியாமைக்கால சடங்குகள்,மார்க்கரீதியான பித்அத்கள்,இணைவைப்பு கொள்கைகள் அனைத்திற்கும் மறுப்பளிக்கப்பட்டுள்ளது. இந்தியாவிலே முஸ்லிம்கள் அறியாமை, மனோஇச்சையின் காரணமாக தவறான கொள்கையில் அகப்பட்டிருந்தனர். எத்தனையோ இந்துக்களின் சடங்குகளும் சம்பிரதாயங்களும் இஸ்லாமியர்களிடத்தில் ஊடுருவி இருந்தன.அத்தனை தவறான கொள்கைகளுக்கும் மறுப்பு உள்ளது.(فتاوى دار العلوم ديوبند)

தொகுப்பாளர் அஹ்லுஸ் ஸுன்னா உலமாகள்.